மாநகர நூலகம் ... 1993 யாழ்ப்பாணம்

## யாழ்நகரில் இருந்தபோது உயிருக்கு பயந்தோம்!

### 'ராவய' நிருபர் கூறுகிறார்

(லண்டன்)

யாழ்ப்பாணத்தில் தங்கிய காலங்களில், மண்டைதீவு முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிர (2ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 8 இதழ் 249
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 24 10 1993

### ஆஸி. தொலைக்காட்சியில் புலிகள் தலைவர் 'பிரபா'

(சிட்னி)

இலங்கைப் பிரச்சினை குறித்து அவுஸ்திரேலிய சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் அண்மையில் ஒளிபரப்பிய நிகழ்ச்சி ஒன்றில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனின் படங்களும் காண்பிக்கப்பட்டுள்ளன.

"இலங்கையின் குகையில் புலிகள் என்றதலைப்பில் வெளியான இந் நிகழ்ச்சியில் புலிகள் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன, திருமதி சிறிமாவோ (4-ம் பக்கம் பார்க்க)

### கிளாலி—பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி — பூநகரி படகுச் சேவை, இன்றும் நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (ஈ)

## வடக்கு-கிழக்கில் குண்டுவீச

# வெளிநாட்டு விமான ஓட்டிகளை

# அரசு வாடகைக்கு அமர்த்தும்!

### பேச்சுக்கள் நடக்கிறது

(லண்டன்)

தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்திவரும் அரசு விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்களை ஓட்டுவதற்கு வெளிநாடுகளிலிருந்து யுத்தவிமான ஓட்டிகளை வாடகைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

விசேட பயிற்சி பெற்ற விமானிகளின் சேவைகளைப் பெறும் பொருட்டு வெளிநாடுகளிலுள்ள தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் உதவியை அரசு தற்போது நாடியுள்ளது.

ஆனையிறவு யுத்தத்தின் போது "வை - 12" ரக விமானம் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதிலும் அதில் பயணம் செய்தவர்களில் விசேடபயிற்சி பெற்ற விமானஓட்டிகள் பலரும்கொல்லப்பட்டனர். இதனால் இலங்கையில் விசேட பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரேல் உளவுப் படையான மொசாட்டும் பிரிட்டன் கூலிப் படையான 'கினிமினியும்' விமான ஓட்டிகளை இலங்கைக்கு வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. —ரி-சி

### வடக்கு கிழக்கு போரே மிகமுக்கிய பிரச்சினை

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட சகல சமூகங்களும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். இந்த அச்சுறுத்தலை எதிர்த்துப் போராட அரசு உறுதியான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இவ்வாறு கொழும்பில் நேற்று இடம்பெற்ற வைபவ மொன்றில் ஜனாதிபதி விஜயதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்கு—கிழக்கு மோதலே நாடு எதிர்நோக்கியுள்ள மிக முக்கிய பிரச்சினையாகும். இது இனப் பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினையே. அரசு தற்போது சரியான பாதை (4ம் பக்கம் பார்க்க)

## மூன்று தலைமையின் கீழ் ஜே.வி.பி.மூன்றாக பிளவுற்றது

(கொழும்பு)

ஜே. வி. பி இயக்கம் மூன்றாகப் பிளவுபட்டுவிட்டதாக 'யுக்திய' எனும் சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

தெற்கில் ஜே. வி. பி யின் தலைமை 1989 ல் அழிக்கப்பட்டுவிட்டதை தொடர்ந்து தற்போது ஸ்ரீலங்காகோஷ்டி, லண்டன் கோஷ்டி, அமரசிங்க கோஷ்டி என மூன்றாக ஜே. வி. பி பிளவுபட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

இதேவேளை தெற்கில் ஜே. வி. பியின் நடவடிக்கை, பல்கலைக்கழகங்களிலும் தீவிர (4-ம் பக்கம் பார்க்க)

### வடமராட்சிகடலில்

## பீரங்கி படகுகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆனையிறவு இராணுவ முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் தொடர்ச்சியாக அரை மணித்தியாலம் வரை ஷெல் வீச்சு இடம்பெற்றது. இச் ஷெல்கள் மாசார், சோரன்பற்று, அல்லிப்பளை உடுத்துறைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

நேற்று அதிகாலை பலாலி (4-ம் பக்கம் பார்க்க)

## தப்பிஓடிய இராணுவத்தில் நாலாயிரம் பேர் பிடிபட்டனர்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களில் இதுவரை நாலாயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இராணுவ படை பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை மீண்டும் படையில் சேர்ப்பதற்கு இராணுவத்தினர் முயற்சித்து வருகின்றபோதும் மிகச் சிலரைத் தவிர ஏனையோர் படையில் சேர மறுத்துவிட்டனராம்.

இவர்கள் மீது தொடர்ந்தும் விசாரணை நடாத்தி தண் (4-ம்பக்கம் பார்க்க)

★ பிரிட்டனில் நடைபெற்ற

## ஆயுத கண்காட்சிக்கு எதிராக ஈழத் தமிழர் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

பிரிட்டனில் அண்மையில் இடம்பெற்ற ஆயுத விற்பனை கண்காட்சிக்கு எதிராக பிரிட்டிஷ் வாழ் தமிழ்மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பிரிட்டன் இலங்கைக்கு இராணுவ தளபாடங்களை விற்பனை செய்வதற்கு எதிராகவும் இவ் ஆயுத கண்காட்சியில் இலங்கையும் பங்குபற்றி இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு எதிராகவுமே நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற (4-ம் பக்கம் பார்க்க)

## 26,000 ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்!

(கொழும்பு)

தென்பகுதியில் 26,000 ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனராம்.

இவர்கள் சம்பள உயர்வு, மற்றும் சலுகைகள் வழங்குமாறு கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்புவர் என எதிர் பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. —ம-ஜி

தமிழா!
உலகம் வியக்கும் தலைவனே
எமக்குப் படை நடத்துகின்றான்-
பூவா தலையா போட்டுப் பார்க்காதே!
புறப்படு வெற்றி எங்கள் பக்கம்தான்.

## தமிழீழநீதிமன்றம் யாழ் நகரில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் நான்காவது மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை பத்து மணிக்கு நல்லூர் கோவில் வீதியில் [illegible] திறந்துவைக்கப்பட்டது. (3ம் பக்கம் பார்க்க)

மணிவாசகம்

''பிறர் தவறுகளுக்கு சமாதானங்கள் சொல்லலாம். ஆனால் உன் தவறுக்கு ஒருபோதும் சமாதானம் தேடாதே''

- புபிலியஸ்சைரஸ்

## நமது நோக்கு

### கல்வியா, வீரமா செல்வமா?

இந்திய நடனக்குழு ஒன்று சில வருடங்களுக்கு முன் பங்கேரியா சென்றது. அதன் பிரதான நாட்டிய தாரகை தனது பயண அனுபவங்களை 'புரண்ட் லைன்' சஞ்சிகையில் எழுதியிருந்தார்.

''நாம் கல்வித் தெய்வமான கலைமகளை இன்றும் வழிபட்டு வருகின்றோம்!'' எனப் பேட்டி கண்டவருக்குப் பெருமையோடு சொல்லியிருக்கிறார்!

''முற்காலத்தில், ஐரோப்பாவில் கல்வித் தெய்வத்தை 'சோபியா' என்றும், கிரேக்கர்கள் 'அதீனா' என்றும் வழிபட்டு வந்தார்கள்! அதன் காரணமாகத்தான், புதிதாகக் கலைக்கூடமொன்று அமைக்கப்பட்டு அதற்கோர் தலைநகருக்கு 'சோபியா' எனப் பெயரிட்டிருக்கிறோம்!'' - இது அவருக்குக் கிடைத்த பதில்!

கல்வியை, வீரத்தைச், செல்வத்தைக் கடவுள்களாகப் போற்றியிருந்த நிலை பிறநாடுகளில் மங்கிமறைந்து விட்டது.

ஆனால், இந்துக்கள் இன்னும் அவற்றைத் துர்க்கையாக, திருமகளாக, கலைமகளாக வணங்கி வருகின்றனர்.

எந்த முனிவர்களாலும் மதிக்காத வரமுனிவர், எருமைத் தலையுள்ள வராக, மகிடாசுரனை மாறினாராம் சாபத்தால்?

நல்லவர்களுக்கு அந்த மகிடாசுரன் செய்த தீமைகள், அவனால் இழைத்த கொடுமைகள் ஏராளம் துர்க்கை போரிட்டு அசுரனை அழித்தாள்.

அநீதியை, அசுரக் குணத்தால் ஏற்படும் அநியாயங்களை அழிக்க வேண்டியது நியாயமே என்ற எண்ணம் வலுப்பெறுகின்றது!

ஆயகலைகள் அறுபத்திநான்கு. கலைகள் பல மறைக்கப்பட்டதனால் தான் தமிழர்களுக்கு இன்று இந்த நிலையோ?

மறைக்கப்பட்ட கலைகளிற் போர்க்கலை இடம்பெறுது என்பது நிச்சயமாகிவிட்டது.

வன்னி மரத்தைப் போற்றி வழிபடுவது விஜயதசமித் தினத்தன்று ஒரு சிறப்பம்சம். அஞ்ஞாதவாசத்தின் போது, பாண்டவர்கள் வன்னி மரத்தடியில் ஆயுதங்களைப் பதுக்கி வைத்து, விஜயதசமித் தினத்தன்று வெளியே எடுத்தார்களாம்!

பாண்டவர்களிடம் படித்த பாடத்தால், போரின் தந்திரோபாயங்கள் மிக வளர்ந்துவிட்ட காரணத்தால், ஆயுதங்களை எங்கு வைத்திருப்பது, எப்படி வைத்திருப்பது என்பது தெரிய வேண்டியவர்களுக்குத் தெரிகிறது!

''கல்வியா, வீரமா, செல்வமா?'' - இன்றைய பட்டிமன்றங்களின் தலைப்பு இது!

தமிழர் நல்வாழ்வுக்கு இந்த மூன்றும் அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

---

இந்திய மீனவர் விவகாரம்:

# இலங்கை கடற்படையினர் மீது கூடுதல் கட்டுப்பாடு தேவை

— வாழப்பாடி வலியுறுத்து

(சென்னை)

இந்திய கடற்பகுதியில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் இதற்கென இந்திய கடற்படையினரின் ரோந்துப்பணி அங்கு அதிகரிக்கப்படவேண்டும்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி பிரதமர் பி. வி. நரசிம்மராவை மேற்கண்டவாறு வற்புறுத்தியுள்ளார்.

ராமேஸ்வரத்துக்கு அப்பால் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் அச்சுறுத்தலைக் கட்டவிழ்த்து வருகின்றனர். இதனால் கடந்த மூன்று மாதங்களில் பத்து இந்திய மீனவர் கொலைப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர்.

கச்சதீவு விவகாரம் குறித்து இந்திய அரசு உயர்மட்ட பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும்.

கச்சதீவு பகுதியில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு இலங்கைக்கடற்படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் இது அந்நாட்டு அரசாங்கத்துடன் இந்தியா செய்துகொண்டுள்ள உடன்பாட்டுக்கு எதிரானது என்று திரு. வாழப்பாடி ராமமூர்த்தி பிரதமருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

---

# 'தடா' கைதியாக்கி சிறைக்கு அனுப்புவதற்கு சதி முயற்சி

## கோபாலசாமி கூறுகிறார்

(சென்னை)

தேசத்துரோகக் குற்றச்சாட்டின்மீது தன்மீது அபாண்டமான பழியைச் சுமத்தி 'தடா' சட்டத்தின் கீழ் விசாரணை ஏதுமின்றி 8 வருடங்களுக்கு தன்னை சிறைக்கு அனுப்புவதற்கு திரு. முரசொலி மாறன் முயற்சிகள் மேற்கொண்டுவருவதாக திரு. வை. கோபாலசாமி சென்னையில் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் நான் தொடர்புகளை வைத்திருப்பதாக முன்னர் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

இக்கமுயற்சிகள் பலனளிக்காததால் 'தடா' சட்டத்தின்கீழ் என்னை சிறைக்கு அனுப்புவதற்கு திரு முரசொலிமாறன் முயற்சிப்பதாக திரு. கோபாலசாமி மேலும் கூறினார்.

எனினும் திரு. வை. கோபாலசாமியின் குற்றச்சாட்டுகளை திரு. முரசொலி மாறன் மறுத்துள்ளார்.

[—வி-ஜ

---

# வீட்டுத்தோட்டப் போட்டி

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றம் யுனிசெப் உதவியுடன் நடாத்தும் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப்போட்டிக்கு விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசிநாள் இந்தமாதம் 30ம் திகதியாகும். இந்தப்போட்டியில் பங்குபற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய விதைகளை மாநகராட்சிமன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இலவசமாகப்பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படை சேவைகள் திட்டப்பிரிவுடன் தொடர்புகொள்ளவும். 162-ஜ

---

காஷ்மீர் மசூதி ஆக்கிரமிப்பு:

# தகுந்த நடவடிக்கை எடுக்க இந்திய அரசுக்கு அனுமதி

(சென்னை)

காஷ்மீர் ஸ்ரீநகரில் தீவிரவாதிகள் அசரத்பல் மசூதியை ஆக்கிரமித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமையை சமாளிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுப்பதற்கு தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சிலின் நிலைக்குழு அனுமதிவழங்கியுள்ளது.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தலைமையில் நேற்று முன்தினம் கூடிய இக்குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமாக அரசு முழு ஆதரவும் வழங்குவதென முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளையில் தீவிரவாதிகள் சில வெளிநாட்டு சக்திகளின் துணையுடன் காஷ்மீரில் வன்முறைகளில் ஈடுபட்டுவருவதாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் குற்றம் சாட்டியுள்ளார். (இ)

---

# காஷ்மீர் தீவிரவாத தலைவரை இந்தியா கொண்டுவர முயற்சி

(பிரசல்ஸ்)

பெல்ஜியத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள காஷ்மீர் பிரிவினைவாதப் போராளிகள் குழுத் தலைவர் அமனுல்லாவை இந்தியாவுக்குக் கொண்டுவந்து விசாரிக்க இந்தியா நடவடிக்கைஎடுத்து வருகிறது.

இவரை நாடுகடத்தக் கோரும் நடவடிக்கையிலும் இந்தியா முனைப்பாக ஈடுபட்டு வருகிறது.

இந்தியாவுக்கு இவரைக் கொண்டு வந்ததும் ஸ்ரீநகர் தூரதர்ஷன் நிலைய முன்னாள் இயக்குநர் கொலை மற்றும் இந்திய விமானப்படையின் 4 அதிகாரிகள் கொலை பற்றியும் இவர் விசாரிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே-ஜி)

---

# தமிழ்நாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து வருகிறது. கொள்ளைச்சம்பவங்கள் அதிகரிக்கின்றன. இவ்வாறு தமிழக தலைசட்சி இயக்கத்தலைவர் தெரிவித்துள்ளனர்.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த திரு. கே. ராஜாராம், திரு. டி. பி. சுவாமிநாதன் ஆகியோர் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், தமிழக ஆளுநர் மாநில அரசால் அவமதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர் (இ

---

## இராசிபலன்

24-10-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 8)

நவமி மு. ப. 8.09; அவிட்டம் முழுவதும், இராகுகாலம் மாலை 4. 32 முதல் 6.02 வரை சுபநேரம் காலை 9.02 முதல் 10.32 வரை விஜயதசமி மரணயோகம்

மேடம்: தொழில் மேன்மை, ஆராய்ச்சி, செல்வாக்கு

இடபம்: வேதாந்தம், பணியாள் தொல்லை, இல்லறசுகம்

மிதுனம்: முயற்சி தாமதம், பணக்கஸ்டம்; அலைச்சல்.

கடகம்: ஆழ்ந்த சிந்தனை, தேகசௌக்கியம், பயம்

சிங்கம்: நீசர்நட்பு, பிதா சிந்தை, தொழில் லாபம்

கன்னி: சந்திர வெற்றி அதிக உழைப்பு, பெருமை

துலாம்: விதண்டாவாதம், கூடித்தொழில், புத்திரயோகம்.

விருச்சிகம்: வைத்தியசெலவு மனக்குறை, பொய்பேசுதல்

தனுசு: தூரத்துச்செய்தி, இடையூறு, குடும்பபகை

மகரம்: வீண் விரயம், தெய்வவழிபாடு, கோபக்கலை

கும்பம்: தொழில் மந்தம், அன்னியர் தொல்லை வெறுப்பு

மீனம்: மனநிம்மதி, பணப்புழக்கம், தானதர்மம்.

— ஜோஸ்யர்.

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசை நிகழ்ச்சியும், வாணி விழாவும் இன்று 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணியளவில் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராக பங்குபற்றுகிறார்.

0 0

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் ஆலயத்தில் விஜயதசமிவிழா இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் புதிய கல்வி நிலையத்தின் நவராத்திரி விழா இன்று பிற்பகல் 2-00 மணிக்கு ஆசிரியர் த. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீடு, சிறப்புரை, மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. —ஜ

0 0

(கொழும்புத்துறை)

நாவலர் திருநெறி மன்றத்தின் பண்ணிசை வகுப்பு ஓராண்டு பூர்த்தி விழா இன்று 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீராவியடி ஞானப்பு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் —154

0 0

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஒன்றியம் வளர்ந்த ஆய்வரங்கு இன்று மாலை 4-00 மணிக்கு எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும். இன்றைய ஆய்வரங்கிற்கு திரு. என். மகேந்திரராஜா தலைமை தாங்குவதுடன் ஆய்வுரையை எம் சாம்பசிவம் ''திடீர் மரணங்களும் அதற்கான கிரக அமைப்புகளும்'' என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்குவார். எஸ்—

0 0

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு தமிழ்த்தாய் மன்றத்தின் தமிழ்த்தாய் அறிவகத்தில் மாற்றம் சஞ்சிகையினரால் இன்று 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வித்தியாரம்பம் செய்துவைக்கப்படும்.

0 0

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை கல்வி நிலையத்தில் (பழைய பிளாசா, சுண்டுக்குளி) வாணி விழா இன்று காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

---

### தமிழீழ நீதிமன்றம்

([illegible])

யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உத்தியோகபூர்வமாக நீதிமன்றத்தைத் திறந்து வைத்தார்.

தமிழீழ காவல்துறைப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. செந்தாளன் மங்கல விளக்கேற்றி வைக்க தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தமிழீழத் தேசியக் கொடியை பாண்ட் வாத்தியங்கள் முழங்க ஏற்றி வைத்தார் பல பிரமுகர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்கள்

மாவட்ட நீதிமன்றத்தில் யாழ் நகர் நீதியாளர்களாக திரு. மயூரன், திரு. கடர், திரு. இசையமுதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்

தமிழீழ சட்டத்தரணிகள், காவல்துறையினர், மகளிர் காவல் படையினர் உட்பட பெருந்திரளானபொது மக்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்துவழக்கு விசாரணைகள் ஆரம்பமாகின. (162-ஜ)

---

பயிரின் கழிவு பயன்தரு உரமே

